**சுருக்கம்**

பள்ளிக்கல்வி – குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் (திருத்தம்) சட்டம் 2019 – மாநில பாடத்திட்டத்தினை பின்பற்றி செயல்பட்டுவரும் பள்ளிகளில் 5 மற்றும் 8–ஆம் வகுப்பு மாணவர்களுக்கு 2019–2020–ஆம் கல்வியாண்டு முதல் பொதுத்தேர்வு நடத்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக்கல்வி (MS)த் துறை**

**அரசாணை (நிலை) எண். 164**

**நாள் 13.09.2019**
**திருவள்ளுவர் ஆண்டு 2050**
**விகாரி வருடம், ஆவணி 27**
**படிக்கப்பட்டவை:-**

1. குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009.
2. குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் (திருத்தம்) சட்டம் 2019,
3. மத்திய அரசிதழ் அறிவிக்கை நாள் 28.02.2019.
4. தொடக்கக்கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.0780/ ஜெ3 / 2019, நாள் 19.02.2019.

----------------

**ஆணை:–**

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக்கல்வி உரிமைச் சட்டம் 2009, மைய அரசால் இயற்றப்பட்டு 01.04.2010 முதல் நடைமுறைக்கு வந்தது. இதனைத் தொடர்ந்து, அரசாணை (நிலை) எண்.173, பள்ளிக்கல்வித் துறை, நாள் 08.11.2011–ல் இதற்கான விதிகள் வகுக்கப்பட்டு அரசால் அறிவிக்கை வெளியிடப்பட்டது. மேலும், இச்சட்டத்திற்கு மைய அரசால் அவ்வப்போது திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

2. தற்போது, குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக்கல்வி உரிமைச் சட்டம் 2009–க்கு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட திருத்தச் சட்டத்தில், கீழ்கண்டவாறு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:–

"16. (1) There shall be a regular examination in the fifth class and in the eighth class at the end of every academic year.

(2) If a child fails in the examination referred to in sub-section (1), he shall be given additional instruction and granted opportunity for re-examination within a period of two months from the date of declaration of the result.

(3) The appropriate Government may allow schools to hold back a child in the fifth class or in the eighth class or in both classes, in such manner and subject to such conditions as may be prescribed, if he fails in the re-examination referred to in sub- section (2):

Provided that the appropriate Government may decide not to hold back a child in any class till the completion of elementary education.

(4) No child shall be expelled from a school till the completion of elementary education."

3. In section 38 of the principal Act, in sub-section (2), after clause (f), the following clause shall be inserted, namely:-

"(fa) the manner and the conditions subject to which a child may be held back under sub-section (3) of section 16,"

3. இதனையடுத்து இச்சட்டத்திருத்தமானது 01.03.2019 முதல் நடைமுறைக்கு வருவதாக மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட மத்திய அரசிதழ் அறிவிக்கையில், தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. தொடக்கக்கல்வி இயக்குநர், மேலே நான்காவதாக படிக்கப்பட்ட கருத்துருவில், குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் (திருத்தம்) சட்டம், 2019–இன்படி, பள்ளிக்கல்வித் துறையின் கீழுள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் சுயநிதிப் பள்ளிகள், மெட்ரிகுலேசன் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கும் மாநில பாடதிட்டத்தினை பின்பற்றும் இதர துறைகளின் கீழ் வரும் ஆதி திராவிடர் நலத்துறை பள்ளிகள், கள்ளர் சீரமைப்பு பள்ளிகள், மாநகராட்சி பள்ளிகளில், 5 மற்றும் 8–ஆம் வகுப்பு பயிலும் மாணாக்கர்களுக்கும் 2018-2019–ஆம் கல்வி ஆண்டு முதல் அரசு பொதுத்தேர்வு நடத்துவதற்கான அனுமதியும் அப்பொதுத்தேர்வு நடத்துவது சார்ந்து, மாவட்ட தேர்வுக்குழு அமைத்தல், தேர்வு மையம் மற்றும் தேர்வுக்கால அட்டவணை வெளியிடுதல், தேர்வுக்கட்டணம், விடைத்தாள்களை மதிப்பீடு செய்தல், தேர்வு மையங்களைப் பார்வையிடுதல் மற்றும் தேர்வு முடிவு வெளியிடுதல் போன்ற வழிகாட்டு நெறிமுறைகளை அளித்து அதன்மீது அரசின் ஒப்புதலை கோரியுள்ளார்.

5. தொடக்கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு பரிசீலனை செய்து அதனை ஏற்று, 2019–2020–ஆம் கல்வியாண்டிலிருந்து 5 மற்றும் 8–ஆம் வகுப்புக்கு மாணாக்கர்களுக்கு கல்வியாண்டின் இறுதியில் பொதுத் தேர்வு நடத்திட தொடக்கக்கல்வி இயக்குநருக்கு அனுமதியளித்தும், அத்தேர்வு முடிவின் அடிப்படையில் முதல் மூன்று ஆண்டுகளுக்கு மாணவர்களின் தேர்ச்சியை நிறுத்தி வைக்க வேண்டாம் எனவும் அரசு ஆணையிடுகிறது.

6. பொதுத்தேர்வு நடத்துவதற்கான உரிய அறிவிப்புகளை வெளியிடவும், நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் சம்மந்தப்பட்ட இயக்குநர்கள் மற்றும் அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை –6.
தொடக்கக்கல்வி இயக்குநர், சென்னை –6.
மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநர், சென்னை –6.
அரசு தேர்வுகள் இயக்குநர், சென்னை –6.
இயக்குநர், மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை –6
மாநில திட்ட இயக்குநர்,
ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, சென்னை –6.
அரசு துணைச் செயலாளர்கள் மற்றும் அரசு சார்புச் செயளலார்கள்.
பள்ளிக்கல்வித் துறை, சென்னை –9.

நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
பள்ளிக்கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு
மேம்பாட்டுத் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை –9.
அனைத்துப் பள்ளிக்கல்வி பிரிவுகள்.
இருப்பு கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர் 13/5/19